இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1988, திசெம்பர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.20 *தபாற் செலவு : சதம் 75*

1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 19/86
1975

1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப்பெயர்.**

2. (இதனகத்துப்பின்னர் "மூலதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) சனாதிபதியினால் நியமிக்கப்படும் நீதிபதிகளும் பகிரங்க அலுவலர்களும், அமைச்சரவையினால் நியமிக்கப்படும் பகிரங்க அலுவலர்களும், நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நீதித்துறை அலுவலர்களும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களும் ; அமைச்சுக்களிலும் அரசாங்கத் திணைக்களங்களிலும் உள்ள பதவி நிலை அலுவலர்களும் ;";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஈஅ) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் அல்லது 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின் அல்லது 1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்திச்சபைகள் (தேர்தல்கள்) சட்டத்தின் அல்லது உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தல்களின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பதவி தாங்குநர்கள் ;

(ஈஆ) தொழிற்சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் நிறைவேற்று அலுவலர்கள் ;

(ஈஇ) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டத்தின், 1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்திச்

சபைகள் (தேர்தல்கள்) சட்டத்தின் அல்லது உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் தேர்தலுக்கெனப் பெயர் நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் ;

(ஈஈ) புதினத்தாள்கள் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் எப்புதினத்தாள்கள் தொடர்பில் வெளிப்படுத்துகை செய்யப்பட்டுள்ளதோ அப்புதினத்தாள்களின் உரிமையாளர்கள், பத்திராசிரியர்கள் ;

(ஈஉ) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எந்தக் கம்பெனிகளின் பெரும்பாலான பங்குகள் அரசாங்கத்தால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுகிறதோ அந்தக் கம்பெனிகளின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள், மற்றும் பதவிநிலை அலுவலர்கள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் முடிவில், பின்வரும் காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :—

"ஆயின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈஇ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த ஆளொருவர், அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சட்டங்களுள் எதன்கீழேனும் தேர்தலுக்காக வேட்பாளரொருவராக அவரது பெயர் நியமனத் தேதியிலுள்ளவாறான அவரது சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வெளிப்படுத்துகையொன்றை, அத்தகைய பெயர் நியமனத் தேதியன்று அல்லது விடயத்திற்கேற்றவாறுபோல சனாதிபதியாக, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக, மாகாண சபையொன்றின் உறுப்பினர் ஒருவராக, அபிவிருத்திச் சபையொன்றின் அல்லது வேறு ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக அவர் பணியாற்றுவதற்கு அல்லது அமர்வதற்கு அல்லது வாக்களிப்பதற்கு முன்னர், அத்துடன் தேர்தலொன்றில் தோல்வியுற்ற வேட்பாளரொருவரின் விடயத்தில், பெயர் நியமனத் தேதிக்குப் பின்னர் மூன்று மாதக் காலப்பகுதியினுள் அவர் செய்திருந்தால், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகியவராகக் கருதப்படுதல் வேண்டும்." ;

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து பின்வரும் உட்பிரிவை அதற்குப் பதிலாக இடுவதன்மூலமும் :—

"(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் முதலாவது வெளிப்படுத்துகையைச் செய்யுமாறு தேவைப்படுத்தப்படுகின்ற ஒவ்வோர் ஆளும், அத்தகைய ஆள் இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளாக இல்லாதொழிந்தாலன்றி, ஒவ்வோர் ஆண்டிலும் மார்ச்சு முப்பத்தோராம் தேதியில் உள்ளவாறான அவரின் சொத்துக்களினதும் பொறுப்புக்

களினதும் வெளிப்படுத்துகையொன்றை விதித்துரைக்கப் பட்ட படிவத்தில் அவ்வாண்டின் ஜூன் முப்பதாம் நாளள வில் செய்தல் வேண்டும். அத்துடன் இச்சட்டத்தின்கீழ் எத்தேதியன்று அவரது சொத்துக்களும் பொறுப்புக் களும் பற்றிய வெளிப்படுத்துகையொன்றைச் செய்வ தற்கு அவர் முதலில் தேவைப்படுத்தப்பட்டாரோ அத் தேதியில் அவர் வைத்திருந்த சொத்துக்களையும் பொறுப் புக்களையும் அத்தகைய வெளிப்படுத்துகையில் உள்ளடக்கு தல் வேண்டும் :

ஆயின், (2) ஆம் உட்பிரிவின்கீழ், சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வெளிப்படுத்துகையொன்றைச் செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆள் ஒருவர், ஏதே னும் ஆண்டின் மார்ச்சு முப்பத்தோராம் நாளுக்கு முற் போந்த ஆறு மாதங்களிலும் ஏதேனும் தேதியிலுள்ள வாறாக முதலாவது வெளிப்படுத்துகையைச் செய்துள்ள விடத்து, அவ்வாண்டிற்கு வேறொரு வெளிப்படுத்துகை யைச் செய்யுமாறு அவர் தேவைப்படுத்தப்படுதலாகாது.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(அ) அப்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:

"(இ) நீதித்துறை அலுவலர்களினதும் அரசியலமைப்பின் 114 ஆம் உறுப்புரையின் கருத்துக்குள்ளான அட்டவணைப் படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களினதும் நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கும் ;" ;

(ஆ) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(ஐஅ) (i) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின், 1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் (தேர்தல்கள்) சட்டத்தின் அல்லது உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தல்களின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சிகளின் பதவி தாங்குநர்களினதும்;

(ii) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின், 1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் (தேர்தல்கள்) சட்டத்தின் அல்லது உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் தேர்தலுக்கெனப் பெயர் நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களினதும், தேர்தல்கள் ஆணையாளருக்கும் ;

(ஐஆ) தொழிற் சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் நிறைவேற்று அலுவலர்களினால் தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும்;

(ஐஇ) புதினத்தாள்கள் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எப்புதினத்தாள்கள் தொடர்பில் வெளிப்படுத்துகை செய்யப்பட்டுள்ளதோ அப் புதினத் தாள்களின், உரிமையாளர்களினாலும், பத்திராதிபர்களினாலும், பத்திராதிபர் பணியாட்டொகுதி உறுப்பினர்களினாலும் புதினத்தாள்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும்;

(ஐஈ) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட எந்தக் கம்பனிகளின் பெரும்பாலான பங்குகள் அரசாங்கத்தால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுகின்றதோ அந்தக் கம்பனிகளின் தவிசாளர்களினாலும் பணிப்பாளர்களினாலும், பதவிநிலை அலுவலர்களினாலும் கம்பனிகள் பதிவாளருக்கும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

"(3) எவரேனும் ஆள் தோதான அதிகாரிக்கு விதித்துரைக்கப்பட்ட கட்டணமொன்றைச் செலுத்துவதன்மேல், சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் ஏதேனும் வெளிப்படுத்துகையைக் கேட்டுப் பெறுவதற்கும் பார்ப்பதற்கும் உரிமை உடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறித்துரைக்கப்படும் மேலும் ஒரு கட்டணத்தைச் செலுத்துவதன் மீது அத்தகைய வெளிப்படுத்துகையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றைப் பெறுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில், சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் வெளிப்படுத்துகையொன்று தொடர்பாக, "தோதான அதிகாரி" என்பது 4 ஆம் பிரிவின் கீழ் எந்த ஆளுக்கு சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வெளிப்படுத்துகை செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆள் எனப் பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(4) ஓராமுட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றவாறு தவிரவும் 9அ என்னும் பிரிவின் கீழான நடவடிக்கைமுறையொன்றின் நோக்கங்களுக்காகவும் எவரேனும் ஆள், இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆள் ஒருவர் தொடர்பாக, அத்தகைய ஆளிடம் இருப்பதாக அறியப்பட்டதான செல்வ, மற்றும் வருமான மூலாதாரங்களுக்கு ஒவ்வாதனவாக அவர் அண்மைக் காலத்தில் செல்வத்தினை அல்லது ஆதனத்தினை

பெற்றுள்ளார் என்றே, அண்மைக் காலத்தில் நிதி சார்பான அல்லது வியாபார விவகாரங்களில் ஈடுபட்டார் என்றே, செலவுகளை அண்மைக் காலத்தில் உற்றூர் என்றே சார்த்தி அல்லது அத்தகைய ஆளின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் ஏதேனும் வெளிப்படுத்துகையின் உள்ளடக்கங்கள் தொடர்பாக ஒரு பகிரங்கக் கூற்றைச் செய்தல் அல்லது (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அவர் எழுத்திற் கொடுத்த அறிவிப்பின் மீது தோதான அதிகாரியினுல் நடாத்தப்படும் எந்தவொரு புலனுய்வு பற்றியும் அத்தகைய எப்பகிரங்கக் கூற்றையும் செய்தல் தவறுென்றுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(1) ஆளொருவர், இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிவதிலன்றி, அல்லது இச்சட்டத்தின் கீழ் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுறுத்தும் நோக்கத்துக்கு அவசியமாகக் கூடியவாறன்றி, இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளைப் புரிவதில், அல்லது 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான தமது உரிமையைப் பிரயோகிப்பதில் அவரது அறிவுக்கெட்டக்கூடியனவும், இச்சட்டம் ஏற்புடையதாகும் எவரேனுமாளின் அலுவல்கள் தொடர்பானவையுமான எல்லாக் கருமங்களையும் பற்றி இரகசியத்தைப் பேணிக் காத்தலும் பேணிக் காப்பதில் உதவுதலும் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிவதில் அல்லது 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான தமது உரிமையைப் பிரயோகிப்பதில் அத்தகைய கருமம் எவ்வாளுடன் தொடர்புபட்டதோ அவ்வாள் தவிர்ந்த வேறெவரேனுமாளுக்கு அத்தகைய ஏதேனும் கருமத்தைத் தெரிவித்தலோ அல்லது தனதுடைமையில் வந்திருக்கக்கூடிய எவையேனும் பத்திரங்களை அல்லது பதிவேடுகளை அதிகாரமளிக்கப்படாத எவரேனுமாள் பார்வையிடுவதனை அனுமதித்தலோ ஆகாது;"; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் இரகசியத்தைப் பேணிக் காப்பதற்கு அல்லது பேணிக் காப்பதில் உதவுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் அல்லது இலஞ்சச் சட்டத்தின்கீழ், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் அல்லது சுங்கக் கட்டளைச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட அல்லது தொடுக்கப்படவுள்ள வழக்கு நடவடிக்கைகளுக்கு, அல்லது இச்சட்டங்களின் ஏற்பாடுகளைப் பயனுறுத்தும் நோக்கத்துக்கு அவசியமாகக் கூடியவாறன்றி, இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிவதில், அல்லது 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான தமது உரிமையைப் பிரயோகிப்பதில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் ஏதேனும் வெளிப்படுத்துகையை அல்லது அது தொடர்பான வேறேதேனும் ஆவணத்தை ஏதேனும் நீதி

மன்றத்தில் காண்பிப்பதற்கு அல்லது அவரது கவனத்துக்கு வருகின்ற ஏதேனும் கருமத்தை அல்லது காரியத்தை ஏதேனும் நீதிமன்றத்துக்கு வெளிவிடுவதற்கு அல்லது தெரிவிப்பதற்குத் தேவைப்படுத்தப்படலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஆஆ) ஏதேனும் அத்தகைய வெளிப்படுத்துகையிலிருந்து ஏதேனும் சொத்தை அல்லது பொறுப்பை வேண்டுமென்றே தவிர்த்துவிடுகின்றது ;";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(3அ) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, எந்தச் சொத்துத் தொடர்பாகத் தவறு புரியப்பட்டதோ அந்தச் சொத்து அத்தகைய குற்றத்தீர்ப்பின் பயனைக்கொண்டு சகல பாரபந்தங்களுமின்றி, அரசுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(3ஆ) உட்பிரிவு (3அ) என்பதன்கீழ் எவையேனும் சொத்துக்கள் அரசிற்கு உரித்தாக்கப்படுதலானது—

(அ) பறிமுதல் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்படுகின்றவிடத்து, பறிமுதல் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது வலியுறுத்தி மேன்முறையீட்டைத் தீர்மானிப்பதன் மீது ;

(ஆ) பறிமுதல் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடேதும் செய்யப்பட்டிராதவிடத்து, பறிமுதற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று எந்தக் காலத்தினுள் செய்யப்படவேண்டுமோ அந்தக் காலம் முடிவடைந்தபின்னர்,

பயனுறுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 9அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

9. பின்வரும் புதிய பிரிவு, இத்தால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 9அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பிரிவு 9(1) (ஆ) அல்லது (ஆஆ) என்பதில் குறிப்பிடு செய்யப்பட்ட தவறுகளுக்கான குற்ற வழக்குத் தொடர்ச்சிக்கும் விளக்கத் திற்குமான நடவடிக்கை முறை.

9அ. (இப்பிரிவில் "இயைபான தவறு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) அல்லது (ஆஆ) என்னும் பந்தியின் கீழான தவறு ஒன்று பின்வரும் திரிபுகளுக்கமைய, ("குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டம்" என இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும்) 1989 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க விசாரணை செய்யப்படுதலும், விளங்கப்படுதலும், வேறுவகையாகக் கையாளப்படுதலும் வேண்டும் :—

(அ) இயைபான தவறு தொடர்பாக குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் 136(1) (அ) என்னும் பிரிவின் கீழான முறைப்பாடெதுவும், அது—

(i) எழுத்திலிருந்தாலன்றி ;

(ii) வழக்குரைப்பவர் ஒருவரால் வரையப்பட்டுக் கையொப்பமிடப்பட்டாலன்றி ;

(iii) முறைப்பாட்டாளரால் ஒப்பமிடப்பட்டிருந்தாலன்றி ; அத்துடன்

(iv) எந்த வெளிப்படுத்துகை தொடர்பாக தவறு புரியப்பட்டுள்ளது எனச்சார்த்தப்பட்டுள்ளதோ அந்த வெளிப்படுத்துகையின், இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் பெறப்பட்ட, அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று சேர்த்தனுப்பப்பட்டாலன்றி ;

நீதிவானொருவரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதலாகாது ;

(ஆ) இச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும், சட்டத்துறைத் தலைமையதிபதியின் முன் அனுமதி, இயைபான தவறுக்கான ஒரு குற்றவழக்கைத் தொடர்வதற்கு, அவசியம் ஆகாது ;

(இ) இயைபான தவறு தொடர்பாக முறைப்பாடொன்று நீதிவான் ஒருவரினால் ஏற்றுக் கவனிக்கப்படுகின்றவிடத்து, நீதிவான், தவறைப் புரிந்துள்ளதாகச் சார்த்தப்பட்ட ஆளுக்கெதிராக வழக்கு நடவடிக்கை எடுப்பதற்குப் போதிய காரணம் உள்ளதென அவர் அபிப்பிராயப்படுகின்றவிடத்து, குற்றம்சாட்டப்பட்டவரினால் உறப்பட்ட அல்லது உறப்படவிருக்கும் செலவுகளையும் (ஈ) என்னும் பந்தி

யின்கீழ் கட்டளையிடப்படக்கூடியவாறான ஏதேனும் நட்டஈட்டையும் செலுத்துவதற்கெனப் பிணைப்பொறுப்பாக, நீதிவான் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை முறைப்பாட்டாளர் நீதிமன்றத்தில் வைப்பிலிட்டாலன்றி, அத்தகைய ஆளின், வருகையைத் தேவைப்படுத்தி குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டத்தின் 139 ஆம் பிரிவின் கீழ் அழைப்பாணையை வழங்குதலாகாது;

(ஈ) நீதிவான் ஒருவர், இயைபான தவறிற்குக் குற்றம் சாட்டப்பட்ட ஓர் ஆளை விடுதலைசெய்து அல்லது விடுவித்து முறைப்பாடு விழலானதும் அல்லது அலைக்கழிக்கும் தன்மையது எனவும் வெளிப்படுத்துகின்றபோதெல்லாம், நீதிவானினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான பணத்தொகையை நியாயமான செலவாக அரசிற்குச் செலுத்துமாறு நீதிவான் முறைப்பாட்டாளருக்குக் கட்டளையிடுதல் வேண்டும் என்பதுடன், குற்றம் சாட்டப்பட்டவரினால் உறப்பட்ட செலவுத்தொகையையும் பொருத்தமானதென நீதிவான் கருதுகின்றவாறான அத்தகைய நட்டஈட்டையும் முறைப்பாட்டாளரினால் வைப்பிலிடப்பட்ட பிணைப்பொறுப்பிலிருந்து, குற்றம்சாட்டப்பட்டவருக்குச் செலுத்துமாறு முறைப்பாட்டாளருக்குக் கட்டளையிடுதலும் வேண்டும்;

(உ) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் உள்ளது எதுவும், (ஈ) என்னும் பந்தியின்கீழ் நீதிவான் ஒருவரினால் கட்டளையிடப்படக் கூடியவாறான நட்டஈட்டுத்தொகையை வரையறை செய்வதாதலாகாது;

(ஊ) முறைப்பாட்டுக்காரர், இயைபான தவறுக்கான குற்ற வழக்கொன்றில், (ஈ) என்னும் பந்தியின் கீழ் அவருக்கெதிராகக் கட்டளையிடப்பட்ட செலவுகளையும் நட்டஈட்டையும் அரசுக்குச் செலுத்துகின்றவிடத்து, குற்றம் சாட்டப்பட்டவர், அத்தகைய குற்றவழக்குத் தொடர்பாக அத்தகைய முறைப்பாட்டாளருக்குக் கெதிராக ஏதேனும் குடியியல் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுப்பதற்கு அல்லது பேணுவதற்கு, அல்லது சேத வீட்டைப் பெறுவதற்கு உரித்துடையவராகார்; அத்துடன்

(எ) குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் 318 ஆம் பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும், இயைபான தவறுக்கான குற்றவழக்கொன்றின் முறைப்பாட்டுக்காரர், அத்தகைய தவறொன்றுக்குக் குற்றம் சாட்டப்பட்ட ஆளின் விடுதலைக்கெதிராக, சட்டத்துறை தலைமையதிபதியின் எழுத்திலான அங்கிகாரமின்றி, மேன்முறையீடு செய்யலாம்.".

10. பின்வரும் பிரிவு, 20 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 10அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— **முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.**

"சொத்துக்களின் பெறுமதி

10அ. ஏதேனும் சொத்து காசுவகையான வைத்திருக்கைகளை அடக்கியிருந்தாலன்றி, இச் சட்டத்தின்கீழ், இச் சட்டம் ஏற்புடையதாகும் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தின் பெறுமதியைச் சுட்டிக்காட்டுவதற்கு அவரைத் தேவைப்படுத்துவதாக இச் சட்டத்தில் உள்ள எதுவும் வாசிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதலாகாது.".

11. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(அ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

'"சொத்துக்களும் பொறுப்புக்களும்" என்பது இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் இருக்கின்ற சொத்துக்களும் பொறுப்புக்களும் எனப் பொருள்படுவதுடன் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வெளிப்படுத்துநரினால் சொந்தமாக வைத்திருக்கப்படுவதும், வெளிப்படுத்துநர் பயன்நுகர் அக்கறை கொண்டுள்ளதும், வெளிப்படுத்துகை தொடர்புறுத்தும் காலப்பகுதியின் போது வெளிப்படுத்துநரினால் அவரது வாழ்க்கைத் துணையின் அல்லது பிள்ளையின் பெயரில் கொள்ளப்பட்டதுமான ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தையும் அசைவற்ற ஆதனத்தையும் உள்ளடக்கும்;';

(ஆ) "உள்ளூராட்சி அதிகாரசபை" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"நிறைவேற்று அலுவலர்" என்பது, தொழிற்சங்கம் ஒன்று தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது, தொழிற் சங்கங்கள் கட்டளைச்சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்;";

(இ) "உள்ளூரதிகாரசபை" என்னும் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

'"உள்ளூரதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகர சபை அல்லது அபிவிருத்திச்சபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய சபையால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களுக்கு, கடமைகளுக்கு அத்துடன் பணிகளுக்கு நேரொத்த அல்லது அவற்றை ஒத்த தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு, ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;' ;

(ஈ) "உள்ளூரதிகாரசபை" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

'"பதவி தாங்குநர்" என்பது, அங்கீகரிக்கப்பட்ட கட்சி ஒன்று தொடர்பாக அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் தலைவர், உபதலைவர், செயலாளர் அல்லது அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் அத்துடன் அத்தகைய அரசியற் கட்சி தொடர்பாக பணிப்புக்களை வழங்குவதற்கு முறையாகத் தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் வேறு ஆள் எனப் பொருள்படும் என்பதுடன், போஷகராக, தலைவராக அல்லது ஆலோசகராகவாயினும்சரி வேறுவகையாகவாயினுஞ்சரி, எத்தகையதுமான பதவிப் பெயரிடப்பட்ட அத்தகைய அரசியற் கட்சியின் தலைவரையும் உள்ளடக்கும்.' ;

(உ) "பதவிநிலை அலுவலர்" என்னும் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

'"பதவிநிலை அலுவலர்" என்பது—

(அ) அரசாங்கத்தின் அல்லது ஓர் உள்ளூரதிகார சபையின் எவரேனும் ஊழியரின் விடயத்தில்—

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதாம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டதும், அப்பதவியின் ஆரம்ப சம்பள அளவு, 1970 நவம்பர் 18 ஆம் தேதியன்று ஆண்டொன்றுக்கு 6,720 ரூபா விற்குக் குறையாததாகவும் அல்லது சம்பள அளவுகளின் ஏதேனும் பின்னரான மீளாய்வின்கீழ் அத்தகைய ஆரம்பச் சம்பளத்திற்கு நேரொத்த ஆண்டொன்றிற்கான அத்தகைய வேறு தொகையாகவுமிருக்கும் ஏதேனும் பதவியை வகிக்கின்ற எவரேனும் அலுவலர் ;

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதாம் ஆண்டு நவம்பர் 18 ஆம் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்டதும் அதன் ஆரம்பச் சம்பள அளவு, அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று, விடயம் (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதவியொன்றுக்கு அத்தேதியன்று ஏற்புடையதான சம்பள அளவின் ஆரம்பச் சம்பளத்திற்குக் குறையாததாகவும் அல்லது சம்பள அளவின் ஏதேனும் பின்னரான மீளாய்வின்கீழ் முதலில் குறிப்பிடப்பட்ட ஆரம்பச் சம்பள அளவுக்கு நேரொத்த தொகையான ஆண்டொன்றுக்கான அத்தகைய வேறு தொகையாகவும் இருக்கும் ஏதேனும் பதவியை வகிக்கின்ற எவரேனும் அலுவலர் ;

(ஆ) பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் ஊழியரின் விடயத்தில்—

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதாம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டதும், அதன் ஆரம்பச் சம்பள அளவு 1970 நவம்பர் 18 ஆம் தேதியன்று, 7,200 ரூபாவிற்குக் குறையாததாக அல்லது சம்பள அளவுகளின் ஏதேனும் பின்னரான மீளாய்வின் கீழான, அத்தகைய ஆரம்பச் சம்பள அளவுக்கு நேரொத்த, ஆண்டொன்றுக்கான அத்தகைய வேறு தொகையாகவும் இருக்கும் ஏதேனும் பதவியை வகிக்கின்ற எவரேனும் அலுவலர் ;

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதாம் ஆண்டு நவம்பர் 18 ஆம் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்டதும் அதன் ஆரம்பச் சம்பள அளவு, அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று, விடயம் (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதவியொன்றுக்கு அத்தேதியன்று ஏற்புடையதான சம்பள அளவின் ஆரம்பச் சம்பளத்திற்குக் குறையாததாகவும் அல்லது சம்பள அளவின் ஏதேனும் பின்னரான மீளாய்வின்கீழ் முதலில் குறிப்பிடப்பட்ட ஆரம்பச் சம்பள அளவுக்கு நேரொத்த தொகையான ஆண்டொன்றுக்கான அத்தகைய வேறு தொகையாகவும் இருக்கும் ஏதேனும் பதவியை வகிக்கின்ற எவரேனும் அலுவலர்,

எனப் பொருள்படுதல் வேண்டும்.